# ‘பொருளை ஈட்டுவது சுலபம்... தக்க வைப்பது கடினம்’

திருச்சி, ஜூன் 28-

பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் சங்கம் சார்பில் 8வது மாநில மாநாடு மற்றும் கருத்தரங்க தொடக்க விழா திருச்சி ஜோசப் கல்லூரியில் நேற்று நடந்தது.

சங்க மாநில தலைவர் ராணி தலைமை வகித்தார்.

சுய உதவிக்குழு பெண்கள் மற்றும் மகளிர் தொழில் முனைவோர் தயாரிப்பு பொருட்கள் மற்றும் விற்பனை கண் காட்சியை பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் முத்துக்குமார் தொடங்கி வைத்து பேசுகையில், எல்லாருமே அரசு வேலைக்குச் செல்வது சாத்தியமாகாத விஷயம். எனவே தங்களுக்கு ஏற்ற தொழிலை தேர்ந்தெடுத்து செய்தால் வெற்றி பெற முடியும். எல்லா தொழில்களுமே சிறப்பானதுதான். முயற்சி, பயிற்சி இருந்தால் ஏற்றமும், எழுச்சியும் ஏற்படும். வாய்ப்புகள் மறுக்கப்படும் போது முயற்சிக்க தவறக்கூடாது. கிடைக்கும் வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தற்போதுள்ள நவீன தொழில் நுட்பங்களை வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும். அன்னை தெரசா, அம்பானி போன்ற சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றை படிக்க வேண்டும். பொருளை ஈட்டுவது சுலபம். தக்க வைப்பது கடினம். சேவை செய்வது வீட்டிலிருந்தே தொடங்க வேண்டும். மரங்களை நட்டு, சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டும். பெண்களின் வாழ்க்கை நிலை மேம்பட பொருளாதார சுதந்திரம் அவசியமானது என்றார்.



திருச்சி ஜோசப் கல்லூரியில் பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் சங்கம் சார்பில் நடந்த 8வது மாநில மாநாடு மற்றும் கருத்தரங்க தொடக்க விழாவில் பெண் தொழில் முனைவோர்களுக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் முத்துக்குமார் வெற்றிப் பெண்மணி விருது வழங்கினார்.

ஜோசப் கல்லூரி முதல்வர் ஆன்ட்ரு, டிடிட்சியா தலைவர் ராஜூ ரெபேரோ, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ராஜராஜன், பஞ்சாப் நேஷனல் வங்கி முதன்மை மேலாளர் மோகன்தாஸ் பணிக்கர் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். நிகழ்ச்சியில் அமுதா, லட்சுமி, செபஸ்தியம்மாள், ஜெயலட்சுமி, பெட்ரிஷியா ஆகியோருக்கு வெற்றி பெண்மணி விருது வழங்கப்பட்டது. இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான தொழில் முனைவோர் வாய்ப்புகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கம் நடந்தது.

பல்கலைக்கழக மகளிரியல் துறை இயக்குநர் மணிமேகலை வரவேற்றார். வீட் சங்க செயலாளர் மல்லிகா நன்றி கூறினார். இன்று சிறப்பு கருத்தரங்கமும், நிறைவு விழாவும் நடைபெறுகிறது.